CC.NO.175/2015

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.3, இர்ஷாத் அகமத், த/பெ. நிஜாமுதீன், எம்.பி.எண். 20/2024, தேதி 18.10.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் எனது மச்சான் ஆவார். எதிரி 1 முதல் 3 நபர்கள் யார் என்றால் எனக்கு மச்சானுடைய உறவினர்கள் ஆகும். அ.சா.1 நடத்தி வரும் மோண்டியால் எக்ஸ்போர்ட் கம்பெனியில் நான் பங்குதாரா என்றால் இல்லை. அந்த நிறுவனத்தில் நான் மேலாளராகவும் பணிபுரியவில்லை. மேற்படி நிறுவனத்தில் என்ன வரவு செலவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. ராஜ்குமாரை எனக்கு தெரியுமா என்றால் நான் ஒரு முறை பார்த்துள்ளேன். அவர் எனது மச்சான் வீட்டிற்கு வந்துள்ளார். அவர் மதுரையில் எந்த விலாசத்தில் ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வருகிறார் என்று எனக்கு தெரியாது. பணம் கொடுக்கல் வாங்கல், காசோலைகள் கொடுத்த விவரங்கள் ஆகியவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நாள் எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைக்கு காசோலைகள் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

2. காசோலைகள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். வங்கியின் பெயர் இல்லாததால் திருப்பப்பட்டதாக தெரிந்துகொண்டேன். காசோலைகள் திருப்பப்பட்டது குறித்து அ.சா.1 சட்டப்படி

நடவடிக்கை ஏதேனும் எடுத்தாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1 முதல் 3 எதிரிகளை நான் பார்த்து பேசியது உண்டா என்றால் நான் பார்த்திருக்கிறேன் எப்போது பார்த்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு பின்னிட்டுதான் எதிரிகளை நான் பார்த்துள்ளேன். நான் சொல்வது போல சொன்ன நேரத்தில் எதிரிகள் யாரும் வரவில்லை என்றால் சரியல்ல.அ.சா.1 நடத்தி வரும் மோண்டியால் நிறுவனத்திற்கு 1 முதல் 3 எதிரிகளிடமிருந்து அ.சா.1 வங்கி கணக்கிற்கு ரூ.99,950/- பணம் வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் அ.சா.1 க்கு கொடுக்க வேண்டிய பணத்தை மேற்படி நிறுவனத்திற்கு கொடுத்துவிட்டதாகவும், மீதித் தொகையை கொடுத்துவிட்டதாகவும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 எனது மச்சான் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**